

கைத்தொழில் அமைச்சு

கம்பனிகள் பதிவாளர் திணைக்களம்

செயலாற்றுகை அறிக்கை - 2022

செலவினத்தலைப்பு– 297

பொருளடக்கம்

அத்தியாயம் 01 – நிறுவன விபரம் / அமுலாக்கச் சுருக்கம்

1.1 அறிமுகம்

1.2 திணைக்களத்தின் நோக்கு மற்றும் செயற்பணி

1.3 நோக்கங்களும் பிரதான செயற்பாடுகளும்

1.4 திணைக்களத்தின் நிறைவேற்றுத்தர மற்றும் பதவிநிலை அலுவலர் குழாம்

1.5 நிறுவன ஒழுங்கமைப்பு

1.6 திணைக்களக் கட்டமைப்பு

1.7 கம்பனிகள் நிதியம்

அத்தியாயம் 02 - முன்னேற்றங்களும் எதிர்கால இலக்குகளும்

2.1 விசேட வெற்றிகள்

2.2 சவால்கள்

2.3 எதிர்கால இலக்குகள்

அத்தியாயம் 03 – வருடாந்த மொத்த நிதிச் செயலாற்றுகை

3.1 நிதிச் செயலாற்றுகை அறிக்கை

3.2 நிதி நிலைமை அறிக்கை

3.3 நிதிப் பாய்ச்சல் அறிக்கை

3.4 வருமான அறிக்கை

3.5 வருவாய் சேகரிப்பு செயற்றிறன்

3.6 ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாட்டின் பயன்பாட்டு செயலாற்றுகை

3.7 நி.பி 208 இன் பிரகாரம், திணைக்களத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாடுகள்

3.8 நிதி அல்லாத சொத்து அறிக்கையிடல் செயலாற்றுகை

3.9 கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை

அத்தியாயம் 04 – செயற்திறன் குறிகாட்டிகள்

4.1 நிறுவனத்தின் செயற்திறன் குறிகாட்டிகள்

அத்தியாயம் 05 - நிலையான அபிவிருத்தி இலக்குகளை (SDG) அடைவதற்கான செயலாற்றுகை

5.1 இனங்காணப்பட்ட நிலையான அபிவிருத்தி இலக்குகள்

5.2 நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கான வெற்றிகளும் சவால்களும்

அத்தியாயம் 06 – மனித வள விபரங்கள்

6.1 ஆளணி முகாமைத்துவம்

6.2 நிறுவனச் செயலாற்றுகையில் மனித வளப் பற்றாக்குறையின் செல்வாக்கு

6.3 மனித வள அபிவிருத்தி

அத்தியாயம் 07 - இணக்க அறிக்கை

01 – நிறுவன விபரம் / அமுலாக்கச் சுருக்கம்

1.1 அறிமுகம்

1815ஆம் ஆண்டில் இலங்கையின் பொருளாதாரம் ஆங்கிலேயரின் ஆட்சிக்கு உட்பட்டதைத் தொடர்ந்து கோப்பி, தேயிலை, இறப்பர் போன்ற பிரதான ஏற்றுமதிப் பயிர்கள் அறிமுகப்படுத்தப்பட்டு இலங்கையின் பொருளாதாரத்தை விரிவுபடுத்துவதற்கு ஆங்கிலேயர்கள் முற்சித்தனர். வியாபார செயற்பாடுகளை இலகுவாக்குவதற்காக இலங்கையில் கம்பனிகளை பதிவு செய்தல் 1861ஆம் ஆண்டில் கூட்டுப்பங்கு கம்பனிகள் கட்டளைச் சட்டத்தினால் ஆரம்பிக்கப்பட்டது. 1948ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 04ஆம் திகதி வரை நிலைத்திருந்த ஆங்கிலேயரின் ஆட்சிக் காலத்தில் இலங்கையில் கம்பனிகள் பதிவானது, 1897 ஆம் ஆண்டின் கூட்டுப்பங்கு கட்டளைச் சட்டம் மற்றும் 1938ஆம் ஆண்டின் 51ஆம் இலக்க கம்பனிகள் கட்டளைச் சட்டம் ஆகியவற்றின் கீழ் பதிவு செய்யப்பட்டன.

இச்சட்டத்தின் கீழ் கம்பனிகள் பதிவாளர் திணைக்களம் ஸ்தாபிக்கப்பட்டு, வியாபாரச் சின்னங்கள் கட்டளைச் சட்டம், வியாபாரப் பெயர் கட்டளைச் சட்டம், சீட்டுக் கட்டளைச் சட்டம் மற்றும் பொது ஒப்பந்தங்கள் கட்டளைச் சட்டம் என்பவற்றை செயற்படுத்தும் பொறுப்பும் அதற்கு வழங்கப்பட்டது. 1979ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க தேசிய புலமைச் சொத்து சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய 1980ஆம் ஆண்டு தேசிய புலமைச் சொத்து திணைக்களம் உருவாக்கப்பட்டதோடு அத்திணைக்களத்திற்கு 1981ஆம் ஆண்டில் வியாபாரச் சின்னங்கள் கட்டளைச் சட்டத்தை செயற்படுத்துவதற்கான பொறுப்பு கையளிக்கப்பட்டது.

சுதந்திரத்தின் பின்னர் இலங்கையின் வர்த்தகத் துறை தேசிய தனித்துவத்துடன் செயற்பட்டதுடன், அதற்கு வசதியளிப்பதற்காக 1982ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் 1982ஆம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தப்பட்டது. இச்சட்டம் 25 ஆண்டுகளாக செயல்வலுவில் இருந்ததோடு இலங்கையின் பொருளாதார வளர்ச்சி மற்றும் பெருமளவு முதலீட்டாளர்கள் ஈர்க்கப்படுதலை கருத்திற்கொண்டு அச்சட்டத்தை மேலும் இலகுபடுத்தி 2007ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் 2007ஆம் ஆண்டு மே மாதம் 03ஆம் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

மேலும், உலகின் நாற்திசைகளிலிருந்தும் வருகைத்தரும் வாடிக்கையாளர்கள் இலக்கம் 400, டீ.ஆர். விஜேவர்தன மாவத்தை, கொழும்பு 10 எனும் முகவரியில் இயங்கிவரும் கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்திற்கு வருகைத்தந்து மிகவும் சிக்கலானதொரு செயற்பாட்டிற்கு முகங்கொடுத்தே சேவைகளைப் பெற்றுக்கொள்ள நேர்ந்தது. இதனால் சேவை பெறுனர்களின் நேரம், வலு மற்றும் பணமும் வீணடிக்கப்பட்டதுடன், பெருமளவு முதலீட்டாளர்கள் விரக்தியடைந்தனர்.

இதற்கான தீர்வாக நிகழ்நிலை சேவை வழங்கல் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டதுடன், அதற்கான நசுழுஊ செயற்திட்டம் 2017ஆம் ஆண்டில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இந்த கட்டமைப்புத் தொகுதியின் முதற்கட்ட சேவை வழங்கல் 2018ஆம் ஆண்டில் நிகழ்நிலை கம்பனிகள் கூட்டிணைத்தல் முறையின் ஊடாக ஆரம்பித்து வைக்கப்பட்டதுடன், தற்போது இத்திணைக்களமானது, real-time live, eROC ஆகிய கட்டமைப்புத் தொகுதிகளின் ஊடாக 24 மணி நேரமும் நிகழ் நிலையில் சகல சேவைகளையும் வழங்கும் ஒரு அரச திணைக்களமாகும்.

1.2 திணைக்களத்தின் நோக்கு மற்றும் செயற்பணி

நோக்கு

இலங்கையின் வர்த்தகத் துறையை முழுமையாக உள்ளடக்கிய சிறந்த நிறுவன நிர்வாகக் கலாசாரத்தை படிப்படியாக தோற்றுவிக்கத்தக்க வினைத்திறன்மிக்க ஒழுங்குபடுத்தல் கட்டமைப்பை உருவாக்குவதன் ஊடாக நம்பிக்கையான வர்த்தகப் பின்னணியை விருத்தி செய்தலும் அதனைப் போஷித்தலும்

செயற்பணி

கம்பனிகள் பதிவாளர் திணைக்களமானது, அரசின் பொருளாதாரக் கொள்கைகளுக்கும் வர்த்தகக் கொள்கைகளுக்கும் இணக்கப்பாடு ஏற்படும் வகையில் உரிய சட்டங்களின் பிரகாரம் வணிக மற்றும் ஏனைய நிறுவனங்களுக்கு சட்ட ரீதியிலான அந்தஸ்தை பெற்றுக்கொடுப்பதற்கும் அவற்றின் செயற்பாடுகளை முறைப்படுத்தவும் முயற்சிக்கின்றது.

.



1.3 நோக்கங்களும் பிரதான செயற்பாடுகளும்

- 2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டம்
- சங்கங்கள் கட்டளைச் சட்டம் - அத்தியாயம் 123
- 1935ஆம் ஆண்டின் 61 ஆம் இலக்க சீட்டுக் கட்டளைச் சட்டம்
- 1987ஆம் ஆண்டின் 3ஆம் இலக்கப் பொது ஒப்பந்தங்கள் சட்டம்

ஆகியவற்றின் ஊடாக திணைக்களத்திற்கு கையளிக்கப்பட்டுள்ள பிரதான செயற்பாடுகளை நிறைவேற்றுதல், நெறிப்படுத்தல் மற்றும் வழிகாட்டல்.

பிரதான செயற்பாடுகள்

- தனியார், பொது, பிணை வரையறுக்கப்பட்ட, வரையறுக்கப்படாத கம்பனிகள் மற்றும் பட்டியலிடப்பட்ட கம்பனிகளை நிறுவுதல்.
- வெளிநாட்டுக் கம்பனிகள், கடல்சார் கம்பனிகள், சங்கங்கள், பொது ஒப்பந்தங்கள், அடகு பிணைகள், ஆவணங்கள், கணக்காய்வாளர்கள் மற்றும் கம்பனிச் செயலாளர்களைப் பதிவு செய்தல்
- கம்பனிகள் சட்டம், சங்கங்கள் கட்டளைச் சட்டம் ஆகியவற்றின் பிரகாரம் கம்பனிகள் மற்றும் சங்கங்கள் தொடர்பான தகவல்களை இற்றைப்படுத்தும் ஆவணங்களைப் பதிவு செய்தல்
- கம்பனிகளை மூடுதல் மற்றும் கலைத்தல்
- கம்பனிகள்/ சங்கங்கள் தொடர்பான சகல தகவல்களையும் இற்றைப்படுத்தல்
- உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளை வழங்குதல், பொது மக்களுக்கு தகவல்களைப் பெற்றுக் கொடுத்தல்.
- ஆவணங்களை உறுதிப்படுத்தல்
- கட்டணங்களை சேகரித்தல மற்றும் சரிபார்த்தல்
- அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு தேவையான தகவல்கள், உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளைப் பெற்றுக் கொடுத்தலும் உதவியளித்தலும்



1.4 திணைக்களத்தின் நிறைவேற்றுத்தர மற்றும் பதவிநிலை அலுவலர் குழாம்

திரு. சஞ்சீவ திசாநாயக்க
கம்பனிகள் பதிவாளர் நாயகம்

திருமதி. பீ.பீ. ஷியாமா ஹர்ஷனி
கம்பனிகள் பதிவாளர்

திருமதி. எல்.கே.எஸ்.தர்மகீர்த்தி
கம்பனிகள் பதிவாளர்

திருமதி. பீ.ஏ.ஆர்.எம். பாலசூரிய
பிரதான கணக்காளர்

திருமதி. ஜெயவானி சுசாந்தகுமார்
பிரதான உள்ளகக் கணக்காய்வாளர்

திரு. பீ.எஸ்.டி. தரங்க பண்டித சுந்தர
பிரதி கம்பனிகள் பதிவாளர்

திரு. கே.எச்.ஷேன் ஸ்ரீ நிலுஷ டி சில்வா
உதவி கம்பனிகள் பதிவாளர்


திரு. ஆர்.ஆர்.எஸ்.சீ. ரத்நாயக்க
உதவி கம்பனிகள் பதிவாளர்

திரு. எம்.டி.எச்.எஸ். மதுகமகே
உதவி கம்பனிகள் பதிவாளர்/ உத்தியோகபூர்வ பெறுநர் (பதில் கடமை)

திரு. ஜீ.எம்.எஸ். புஷ்பகுமார
புள்ளிவிபரவியலாளர்

திரு. டப்ளியு.எம். கயான் குமார
தகவல் தொழிநுட்ப அலுவலர்

1.5 நிறுவன ஒழுங்கமைப்பு



1. ICTO – Information & Communication Technology Officer
2. DO – Development Officer
3. CIO – Companies Inspector Officers
4. MSO –Management Service Officer
5. ICTA – Information & Communication Technology Assistant
6. OES – Office Employees Service

1.6 திணைக்களக் கட்டமைப்பு

1. தகவல் வழங்கல் பிரிவு
2. கம்பனிகள் பெயர் அனுமதித்தல் பிரிவு
3. புதிய கம்பனிகளைப் பதிவு செய்தல் பிரிவு
4. கம்பனி தகவல்களை இற்றைப்படுத்தல் மற்றும் ஆவணப் பதிவு பிரிவு
5. உறுதிப்படுத்தப்பட்ட பிரதி வழங்கல் பிரிவு
6. முடிவுறுத்தல் பிரிவு
7. சங்கங்களை பதிவு செய்தல் பிரிவு
8. கம்பனிகள் செயலாளர்கள் மற்றும் கணக்காய்வாளர்களை பதிவுசெய்தல் பிரிவு
9. பொது ஒப்பந்தங்கள் (விலைமனு) பிரிவு
10. பதிவேட்டறை மற்றும் விசாரணைகள் பிரிவு
11. கம்பனிகள் பரிசோதகர் பிரவு
12. தாபனப் பிரிவு
13. கணக்குப் பிரிவு
14. உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு
15. தபால் பிரிவு
16. தகவல் தொழில்நுட்ப பிரிவு மற்றும் வாடிக்கையாளர் சேவைகள் பிரிவு

i. தகவல் வழங்கல் பிரிவு

பொதுமக்களின் விசாரணைகளுக்கு துரித பதிலளிக்கும் திறன்மிக்க, நன்கு பயிற்றப்பட்ட அனுபவமிக்க உத்தியோகத்தரால் தகவல் வழங்கல் பிரிவில் தகவல்கள் பெற்றுக் கொடுக்கப்படுகின்றன. திணைக்களத்துடன் தொடர்பு கொள்ளும் மக்களுக்குத் தேவையான தகவல்களை வழங்குதல் மற்றும் வழிகாட்டுதல் இப் பிரிவினால் மேற்கொள்ளப்படுவதுடன் இதன் மூலம் மக்களுக்குத் திணைக்கள சேவை வழங்குதல் இலகுபடுத்தப்படுகின்றது. மேலும், பயனாளர்களால் சமர்ப்பிக்கப்படும் ஆவணங்கள் பரீட்சிக்கப்பட்டு உரிய பிரிவுகளுக்கு அனுப்பி வைக்கப்படுதலும் இப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது.

ii. கம்பனிகள் பெயர் அனுமதித்தல் பிரிவு


கம்பனி பெயரைப் பதிவு செய்வதற்கான விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர், திணைக்களத்தின் தரவுத் தொகுதியில் பரீட்சித்து அப் பெயருக்கு அனுமதியளித்தல் கம்பனிகள் சட்டத்திற்கும் பெயர் அனுமதித்தல் விதிமுறைகளுக்கும் இயங்கியுள்ளதா என அறிக்கையிடுதல், பொது மக்களுக்கும் அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கும் கம்பனிகள் தொடர்பான தகவல்களைப் பெற்றுக்கொள்ள உதவியளித்தல், கம்பனிகளுக்குரிய பதிவு இலக்கங்களைப் பெற்றுக் கொடுத்தல் மற்றும் ஏதேனும் பெயரில் ஏற்கனவே

கம்பனியொன்று பதிவு செய்யப்பட்டுள்ளதாவென அறிக்கையிடுதல் ஆகிய செயற்பாடுகள் இப்பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன.

iii. புதிய கம்பனிகளைப் பதிவு செய்தல் பிரிவு

கம்பனிகளை பதிவு செய்வதற்காக நிகழ்நிலையில் பெற்றுக்கொள்ளப்படும் விண்ணப்பங்களின் உண்மைத்தன்மையை பரீட்சித்து, அவற்றைப் பதிவு செய்வதற்காக சமர்ப்பித்தல் மற்றும் குறைபாடுகளுடன் கூடிய ஆவணங்களின் குறைபாடுகளை உரிய தரப்பினருக்கு அறிவித்தல், கம்பனிகளைப் பதிவு செய்தல் தொடர்பான பொதுமக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்குதல், குறைபாடுகள் திருத்தப்பப்பட்டு மீள அனுப்பப்படும் விண்ணப்பங்களை பரீட்சித்து சரியாயின் அவற்றைப் பதிவு செய்ய நடவடிக்கை எடுத்தல்.

விபரம்	எண்ணிக்கை		
	2020	2021	2022
பெயர் அனுமதிக்காக முன்வைக்கப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை	18,412	26,534	25,352
அனுமதிக்கப்பட்ட விண்ணப்பங்கள்	17,653	26,180	24,327
செயற்படுத்தப்படாத விண்ணப்பங்கள்	834	0	0
நிராகரிக்கப்பட்ட விண்ணப்பங்கள்	4	20	44



அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கை

பெயர் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை

iv. கம்பனி தகவல்களை இற்றைப்படுத்தல் மற்றும் ஆவணப் பதிவு பிரிவு

கம்பனிகளின் தகவல்களை இற்றைப்படுத்தல் மற்றும் ஆவணங்களைப் பதிவு செய்தல் ஆகியன இத் திணைக்களத்தின் முதன்மை செயற்பாடுகளாகும். அவை A, B, C, D மற்றும் E என 5 பிரிவுகளின் கீழ் முன்னெடுக்கப்படுவதுடன் A மற்றும் B பிரிவுகளினால் படிவம் 15 ஆவணங்கள் தொடர்பாகவும் C பிரிவினால் படிவம் 20 ஆவணங்கள் தொடர்பாகவும் D பிரிவினால் படிவங்கள் 6,8 மற்றும் 9 ஆவணங்கள் தொடர்பாகவும் E பிரிவினால் படிவங்கள் 13,14,17,39 ஆவணங்கள் தொடர்பாகவும் கம்பனிகளை ஒருங்கிணைத்தல், கம்பனிகளின் பெயர்களை மாற்றுதல், பிணை வரையறுக்கப்பட்ட கம்பனிகள், கடல்சார் கம்பனிகள் மற்றும் வெளிநாட்டு கம்பனிகள் தொடர்பாகவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது.

v. உறுதிப்படுத்தப்பட்ட பிரதி வழங்கல் பிரிவு

கம்பனிகள் தொடர்பாக சேவை பெறுநர்களினால் கோரப்படும் ஆவணங்களின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகள் இப்பிரிவினால் வழங்கப்படுகின்றது. பொதுமக்களுக்கு வினைத்திறனான துரித சேவையை வழங்குவதை நோக்காகக் கொண்டு கம்பனிகள் தொடர்பாக பதிவு செய்யப்பட்ட சகல ஆவணங்களினதும் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகள் இப்பிரிவினால் வழங்கப்படுகின்றது.

vi. முடிவுறுத்தல் பிரிவு

இப்பிரிவானது, கம்பனிகளின் பெயர்களை நீக்குதல் மற்றும் கம்பனிகளைக் கலைத்தல் தொடர்பாக பின்வரும் முறைகளில் நடவடிக்கைகளை மேற்கொள்கின்றது.

1. 2007ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 394ஆம் பிரிவின் கீழ் பெயரை நீக்குதல்.

➢ சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களற்ற கம்பனிகளின் பெயர்களை நீக்குதல். இதன்போது கம்பனிகளை முடிவுறுத்துவதற்கு சகல பணிப்பாளர்கள் மற்றும் பணிப்பாளர்கள் அல்லாத பங்காளர்களிடமிருந்து சத்தியக் கடதாசியும் கோரிக்கைக் கடிதமும் பெற்றுக்கொள்ளப்படுவதுடன், அதன் பின்னர் குறித்த சத்தியக் கடதாசி தொடர்பான கட்டளைகளை பெற்றுக்கொள்வதற்காக சமர்ப்பிக்கப்படும். தொடர்ந்து கம்பனிகள் 9 (கம்பனிக்கு) மற்றும் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு விசாரணைக் கடிதம் தயாரிக்கப்படுவதுடன், அக் கடிதத் தினத்திலிருந்து ஒரு மாதமும் 10 தினங்களில் கம்பனிகள் 10 மற்றும் கம்பனிகள் 04 கடிதங்கள் தயாரிக்கப்படும். உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தின் ஆட்சேபனை இல்லையாயின், மும்மொழிகளிலும் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்படும். அதனைத் தொடர்ந்து வர்த்தமானி அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டு 3 மாதங்களின் பின்னர் கம்பனியின் பெயர் நீக்கப்படும்.

உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம் ஆட்பேசனை தெரிவிக்கும் கம்பனிகள் தொடர்பாக உரிய கம்பனிக்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு குறித்த ஆட்சேபனை நீக்கப்படும் வரை கம்பனியை முடிவுறுத்துதல் இடைநிறுத்தப்படும்.

- ஆண்டறிக்கையை சமர்ப்பிக்காத கம்பனிகள் தொடர்பில் அக்கம்பனிகளுக்கு தெரியப்படுத்தியதன் பின்னர் அதற்குரிய பதிலெதுவும் கிடைக்கவில்லையாயின் மற்றும் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தின் ஆட்சேபனை இல்லையெனில், 2007ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 394ஆம் பிரிவின் கீழ் அக் கம்பனிகளின் பெயர்களை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

2. சொத்துக்கள் பொறுப்புக்கள் காணப்படும் கம்பனிகள் தொடர்பாக கலைப்பாளர் ஒருவர் நியமிக்கப்பட்டு

- ❖ உறுப்பினர்களின் சுயவிருப்பில்
- ❖ கடன் கொடுத்தோரின் விருப்பின் பேரில்
- ❖ நீதிமன்றக் கட்டளைக்கமைய

போன்ற மூன்று முறைகளுள் ஒரு முறையின் கீழ் கம்பனி கலைக்கப்படும். இதன்போது சமர்ப்பிக்கப்படும் ஆவணங்கள் பதிவுசெய்யப்படுவதுடன், இறுதி ஆவணம் பதிவு செய்யப்பட்டு மூன்று மாதங்களின் பின்னர் கம்பனி கலைக்கப்படும். நீதிமன்ற கட்டளைக்கமைய தீர்மானிக்கப்பட்டு கலைக்கப்படும் போது இறுதி நீதிமன்றக் கட்டளை பதிவு செய்யப்பட்டதன் பின்னர் கம்பனி கலைக்கப்படும்.

3. கம்பனிகள் ஒருங்கிணைக்கப்பட்டதன் பின்னர் கம்பனிகளின் பெயரை நீக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல்.


4. கம்பனிகளின் பெயர்கள் நீக்கப்பட்டுள்ளதாவென அறிந்துகொள்ள நாளாந்தம் வருகைத்தரும் பயனாளிகளின் கோரிக்கைகள் தொடர்பாக ஆவணங்களை வழங்குதல்.

5. தற்போது நிகழ்நிலை மூலமாகவும் பெயர் நீக்குதல் முன்னெடுக்கப்படுகின்றது.

6. மேலும் பெயரை நீக்குவதற்கு சத்தியக் கடதாசி முன்வைக்கப்பட்டிருப்பினும் அதன் பின்னர் குறித்த கம்பனிகளை தொடர்ந்தும் நடாத்திச் செல்வதற்கான தேவை ஏற்படின் அக்கம்பனிகளிடமிருந்து சத்தியக் கடதாசிகளைப் பெற்றுக்கொண்டு பெயரை நீக்குவதற்கான கட்டளையை இரத்துச் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல்.

கலைக்கப்பட்ட மற்றும் இரத்துச் செய்யப்பட்ட கம்பனிகளின் எண்ணிக்கை (2022.12.31 வரை)


	2019	2020	2021	2022
அங்கத்தவர்களின் சுயவிருப்பில் முடிவுறுத்தல்	43	21	09	27
கடனகொடுத்தோரின் விருப்பின் பேரில் முடிவுறுத்தல	09	05	06	05
நீதிமன்றத் தீர்ப்பினால் முடிவுறுத்தல்	06	01	03	04
கம்பனிகள் சட்டத்தின் 394ஆம் பிரிவின் கீழ் நீக்கப்படல்	381	210	209	212
ஒன்றிணைத்தல் காரணமாக பெயரை நீக்குதல்	46	29	15	4
வெளிநாட்டுக் கம்பனிகளின் பெயரை நீக்குதல்	0	0	13	13
மொத்தம்	485	266	255	265



vii. சங்கங்களை பதிவு செய்தல் பிரிவு

சங்கங்கள் கட்டளைச் சட்டம் 123ஆம் பிரிவின் கீழ் 08 அதிகாரிகளை விட அதிகமாகவுள்ள சங்கங்களைப் .பதிவு செய்தல் மற்றும் நெறிப்படுத்தல் இப் பிரிவின் கீழ் நடைபெறுகின்றது. 31.12.2022ஆம் திகதி வரை பதிவு செய்யப்பட்டுள்ள மொத்த சங்கங்களின் எண்ணிக்கை 16,196 ஆகும்.

சங்கங்களின் வகை	2016	2017	2018	2019	2020	2021	2022
விகாரைகள்	21	16	18	06	01	-	-
சர்வோதய	-	-	-	-	-	-	-
மிதுரு சங்வர்தன	83	48	09	-	-	-	-
இசுரு சங்வர்தன	-	-	-	-	-	-	-
மகளிர் சங்கங்கள்	-	-	-	-	-	-	-
கிராமிய அபிவிருத்தி	-	-	-	-	-	-	-
கிராமசக்தி	-	-	1037	2431	98	01	-
நீர்	-	-	-	-	09	01	-
ஏனையவை	21	15	22	18	32	29	22
பதிவு செய்யப்படவுள்ளவை	-	-	-	-	-	01	-
மொத்தம்	**125**	**79**	**1086**	**2455**	**140**	**32**	**22**




viii. கம்பனிகள் செயலாளர்கள் மற்றும் கணக்காய்வாளர்களை பதிவு செய்தல் பிரிவு

1987ஆம் ஆண்டின் கம்பனிகள் செயலாளர்கள் பற்றிய கட்டளையின் கீழ் உரிய தகைமைகளைப் பூர்த்தி செய்து விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகளை கம்பனிகள் செயலாளர்களாக பதிவு செய்தல் மற்றும் 1964ஆம் ஆண்டின் கம்பனிகள் கணக்காய்வாளர் கட்டளையின் கீழ் உரிய தகைமைகளைப் பூர்த்திசெய்து விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகளை கம்பனிகள் கணக்காய்வாளர்களாக பதிவு செய்தல் இப்பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது. 31.12.2022ஆம் திகதி வரை 1026 கம்பனிகள் செயலாளர்களும் 388 கணக்காய்வாளர்களும் பதிவு செய்யப்பட்டுள்ளனர்.

கம்பனிகள் செயலாளர்கள் மற்றும் கணக்காய்வாளர்களை பதிவு செய்தல்

வருடம்	கணக்காய்வாளர்கள்	கம்பனிகள் செயலாளர்கள்
2016	29	680
2017	26	817
2018	20	815
2019	11	264
2020	315	641
2021	359	779
2022	388	1026




ix. பொது ஒப்பந்தங்கள் பிரிவு


1987ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் கீழ் 05 மில்லியனுக்கு அதிகமான ஒப்பந்தங்கள் தொடர்பாக கிடைக்கப் பெறும் விண்ணப்பங்களைப் பரிசீலித்து ஒப்பந்தக்காரர் அல்லது அவரது முகவர், துணை முகவர், அல்லது பெயர் குறிப்பிடப்படும் ஒருவராக பதிவு செய்தல், புதுப்பித்தல் மற்றும் பொது ஒப்பந்த உடன்படிக்கை சட்டத்தின் கீழ் ஒப்பந்தங்கள் பதிவு செய்தல், புதுப்பித்தல் இப்பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது.

பொது ஒப்பந்தங்களைப் பதிவு செய்தல்

வருடம்	அளவு	வருமானம் (ரூ.)
2016	17875	29,949,500.00
2017	19275	31,174,500.00
2018	24743	39,502,500.00
2019	23962	41,895,000.00
2020	19233	44,608,336.00
2021	22445	50,344,000.00
2022	13216	29,066,000.00

வருடாந்த பொது ஒப்பந்தங்கள் பதிவு வருமானம் (ரூ.)





x. பதிவேட்டறை மற்றும் விசாரணைகள் பிரிவு

கம்பனிகள் மற்றும் சங்கங்களின் ஆவணங்களைப் பாதுகாப்பாக வைத்திருத்தல், தேவையான சந்தர்ப்பங்களில் அலுவலர்களுக்கும் உரிய மேற்பார்வையின் கீழ் பொதுமக்களுக்கும் பரீட்சித்துப் பார்ப்பதற்காக வழங்குதல், மீண்டும் அக் கோவைகளை உரியவாறு பொறுப்பேற்றுக் கொள்ளலும் பதிவேட்டறையினால் மேற்கொள்ளப்படுகின்றது. கட்டணம் செலுத்தியதன் பின்னர் திணைக்கள மேற்பார்வையின் கீழ் கம்பனிகளின் கோவை மற்றும் சங்கங்களின் கோவைகளை பௌதீக ரீதியில் பரீட்சித்துப் பார்ப்பதற்காக பொதுமக்களுக்கு விசாரணைக் கூடத்தில் இடவசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. நாளாந்தம் பதிவேட்டறையில் உள்ள கோவைகளின் எண்ணிக்கையும் படிப்படியாக அதிகரித்து வருவதனால் திணைக்களச்

செயற்பாடுகளை கணனி மயப்படுத்தும் தேவை பதிவேட்டறைக்கு மிக விசேடமாக காணப்படுகின்றது.

xi. கம்பனிகள் பரிசோதகர் பிரிவு

இப் பிரிவின் செயற்பாடுகளுக்காக கம்பனி பரிசோதகர்கள் நியமிக்கப்பட்டுள்ளதுடன், பிரிவின் செயற்பாடுகள் பின்வருமாறு,

- கம்பனிகள் சட்டத்திற்கு விரோதமாக செயற்படும் கம்பனிகள் மற்றும் பணிப்பாளர்களுக்கு எதிராக கம்பனிகள் பதிவாளர் நாயகத்தின் கட்டளையின் கீழ் வழக்குத் தொடுத்தலும் அவ்வாறு தொடுக்கப்பட்ட வழக்குகளில் கம்பனிகள் பதிவாளர் நாயகத்தின் சார்பில் நீதிமன்றத்தில் ஆஜராகுதல்.
- நீதிமன்ற வழக்கு விசாரணைகளில் கம்பனிகள் பதிவாளர் நாயகத்தின் பிரதிநிதியாக ஆஜராகுதல்.
- கம்பனிகள் பதிவாளர் நாயகத்தின் கட்டளையின் கீழ் கம்பனிகளுக்கு சென்று ஆவணங்களை பரீட்சித்தல் மற்றும் கள பரிசோதனைகளை செய்தல்.
- கம்பனி பதிவாளர் நாயகத்தின் கட்டளையின் கீழ் ஏனைய அரச நிறுவனங்களுக்கு விசாரணைகளுக்கு தேவையான ஆவணங்களை வழங்குதல், அறிக்கைகளை வழங்குதல் மற்றும் உதவியளித்தல்.

xii. தாபனப் பிரிவு

இப்பிரிவானது, திணைக்களத்தின் நிர்வாக செயற்பாடுகளை முறையாகவும் சீராகவும் முன்னெடுத்துச் செல்வதுடன், அதன் மேற்பார்வை நடவடிக்கைகள் பிரதி கம்பனிகள் பதிவாளரினால் மேற்கொள்ளப்படுகின்றது.

xiii. கணக்குப் பிரிவு

திணைக்களத்தின் நிதி மற்றும் கணக்கியல் நடவடிக்கைகள் இப் பிரிவினால் முன்னெடுக்கப்படும் அதேவேளை, பிரதான கணக்காளரின் மேற்பார்வையின் கீழ் அவை இடம்பெறுகின்றன.

xiv. உள்ளக கணக்காய்வுப் பிரிவு

உள்ளக நிர்வாக முறைமையினை ஒழுங்குபடுத்துவதற்காக கணக்காய்வு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக 2016ஆம் ஆண்டில் திணைக்களத்தில் இப் பிரிவு ஸ்தாபிக்கப்பட்டதுடன் முதலாம் தர கணக்காளர் ஒருவரின் மேற்பார்வையின் கீழ் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றது.

xv. தபால் பிரிவு

திணைக்களத்திற்கு கிடைக்கப் பெறும் கடிதம், ஆவணங்களைப் பெற்றுக் கொள்ளுதல், உரிய பிரிவுகளுக்கு வழங்குதல் மற்றும் திணைக்களத்திலிருந்து வெளிச்செல்லும் கடிதம், ஆவணங்கள் தொடர்பான நடவடிக்கைகள் இப் பிரிவினால் முன்னெடுக்கப்படுகின்றது.

xvi. தகவல் தொழில்நுட்ப பிரிவு மற்றும் வாடிக்கையாளர் சேவைகள் பிரிவு

கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்தின் பிரதான பிரிவுகளுக்கிடையே விசேடமான செயற்பணிகளை ஆற்றும் மற்றுமொரு முக்கிய பிரிவாக தகவல் தொழில்நுட்ப பிரிவு காணப்படுகின்றது. திணைக்களத்தின் முதன்மை நோக்கமான கம்பனிகளை பதிவு செய்வதற்காக இதுவரை காணப்பட்ட கோவைகளை முதன்மைப்படுத்திய மனிதவலு செயன்முறைக்குப் (Manual Process) பதிலாக நிகழ்நிலை கணனிச் செயற்பாடு "eRoc Online Process" நாடளாவிய ரீதியில் 2018ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் அறிமுகப்படுத்தப்பட்டதை தொடர்ந்து இப் பிரிவின் செயற்பாடுகள் மிக விரிவாக்கம் பெற்றன. மிகவும் பரவலாக நடைமுறைப்படுப்படுத்தப்படுகிறது. இவ் விசேடத்திட்டம் 2018 ஏப்ரல் மாதம் முதல் அறிமுகப்படுத்தப்பட்டது.

இத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டமையினால் இதுவரை முன்னெடுக்கப்பட்ட செயன்முறையில் இருந்துவந்த நடைமுறை ரீதியிலான குறைபாடுகளை இனங்கண்டு கொள்ளவும் அவற்றிற்கு துரித தீர்வுகளை வழங்குவதற்கும் இந்த கம்பனிகளைப் பதிவு செய்யும் நடைமுறையானது மிகக் குறுகிய காலத்தினுள் வினைத்திறனாகவும் பயனுறுதியான முறையிலும் வாடிக்கையாளர்களை முதன்மைப்படுத்திய (Client Oriented) திட்டமாக அறியப்படுவதற்கும் தகவல் தொழிநுட்பப் பிரிவினூடாக பல்வேறுபட்ட செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அவற்றிடையே மிக விசேடமான சில செயற்பாடுகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

- பயன்பாட்டிற்கு இலகுவான (User Friendly) செயற்பாட்டினை அறிமுகப்படுத்தல்.
- கம்பனிகளை பதிவு செய்யும் செயற்பாட்டிற்கு செலவாகும் காலத்தை இயன்றளவு குறைத்தல்.
- உரிய கட்டணங்களை இணைய வாயிலாக செலுத்துவதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல்.
- இதுவரை பயன்பாட்டிலிருந்த விண்ணப்பப்படிவத்திற்கு பதிலாக கணனியில் விண்ணப்பதாரியால் உட்செலுத்தப்படும் தரவுகளைக் கொண்டு தன்னியக்கமாக விண்ணப்பப்படிவங்களையும் (System Generated Applications) உரிய மாதிரிப் படிவங்களையும் தயாரித்துக் கொள்ளல்
- வாடிக்கையாளர்களுக்கு தம்மால் பதிவு செய்யப்பட்ட நிறுவனங்கள் பற்றிய தகவல்களை தமக்குத் தேவையான சந்தர்ப்பங்களில் தமது உட்செலுத்துகை தகவல்களைக் (User

Login Details) கொண்டு தேவையான எந்தவொரு நேரத்திலும் எவ்விடத்திலும் கணனியின் ஊடாக பெற்றுக்கொள்ள முடியும்.

- கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்திற்கு பதிவு நடவடிக்கைகளுக்காக வருகைத்தரும் வாடிக்கையாளர்களுக்கு கணனியை பய்னபடுத்துவதற்கான வசதிகள் தகவல் தொழிநுட்ப பிரிவில் ஏற்படுத்தப்பட்டுள்ளன.
- தேவையான சந்தர்ப்பங்களில் eRoC Online Process தொடர்பான தகவல்களையும் ஆலோசனைகளையும் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
- வாடிக்கையாளர்களுக்குத் தேவையான தொழிநுட்ப ஆலோசனைகளைப் பெற்றுக் கொடுப்பதற்கும் இப் பிரிவினால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
- வாடிக்கையாளர்களுக்கான விழிப்புணர்வு வேலைத்திட்டங்கள் காலத்திற்கு காலம் முன்னெடுக்கப்படும்.

எவ்வாறாயினும் இத் திணைக்களத்திற்கு அனுமதிக்கப்பட்டுள்ள இலங்கை தகவல் தொடர்பாடல் தொழிநுட்டப சேவை பணிப்பாளர், 02 உதவிப் பணிப்பாளர்கள், 03 தகவல் தொடர்பாடல் தொழிநுட்ப அதிகாரிகள் மற்றும் 04 தகவல் தொடர்பாடல் தொழிநுட்ப உதவியாளர்கள் ஆகியோருக்கான வெற்றிடங்கள் நிலவுவதனால் eRoC Online Process (நிகழ்நிலை செயற்பாட்டினை) வெற்றிகரமாக முன்னெடுத்து செல்லல் பாரிய சவாலாகவே இருந்து வருகின்றது.

1.7 கம்பனிகள் நிதியம்

2007ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 479ஆம் பிரிவின் கீழ் கம்பனிகள் நிதியம் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. கம்பனிகள் பதிவாளர் நாயகத்தின் உடன்பாட்டுடன் நிதி அமைச்சின் செயலாளரினால் பரிந்துரைக்கமைய இந்நிதியம் செயற்படுத்தப்படுகின்றது. கம்பனிகள் பதிவாளர் நாயகத்தினால் இச்சட்டத்தின் கீழ் பரிந்துரைக்கப்படும், விதிக்கப்படும் அல்லது வசூலிக்கப்படும் அனைத்து கட்டணங்களிலும் அறவீடுகளிலும் மூன்றில் இரண்டு பங்கு (2/3) கம்பனிகள் நிதியத்திற்கு செலுத்தப்படல் வேண்டும். இச்சட்டத்தின் கீழ் தமது அதிகாரத்தினை நடைமுறைப்படுத்தும் போது அமைச்சின் செயலாளரின் இணக்கப்பாட்டுடன் கம்பனிகள் பதிவாளர் நாயகத்தினால் மேற்கொள்ளப்படும் ஏதேனும் செலவுகளை மீளச் செலுத்துவதற்கு குறித்த மொத்தத் தொகையையும் இந்நிதியத்தினால் செலுத்த முடியும்.

02. முன்னேற்றங்களும் எதிர்கால இலக்குகளும்

2.1 விசேட வெற்றிகள்

- **கம்பனி ஒன்றை நிறுவுவதில் இருந்து கம்பனியை முடிவுறுத்தல் வரையான அனைத்துச் செயற்பாடுகளையும் 100% இணையத்தின் வாயிலாக நிறைவேற்றுதல்.**

  கம்பனியின் பெயரை அங்கீகரிப்பதில் இருந்து கம்பனியை நிறுவுவது வரையிலும், கம்பனியில் நிகழும் மாற்றங்களை இற்றைப்படுத்துவது முதல் கம்பனியின் பெயரை அகற்றுதல் மற்றும் முடிவுறுத்தல் வரையிலுமான அனைத்து சேவைகளையும் 100%இணையத்தின் வாயிலாக மேற்கொள்ளக் கிட்டியமை கம்பனி பதிவுத் திணைக்களம் பெற்ற வெற்றியாகும். இங்கு ஒரு கம்பனியின் பெயரை அங்கீகரிப்பதற்கு வேண்டுகோள் கிடைத்ததும் அமைப்பினால் அது பரிசீலிக்கப்பட்டு அந்தக் கணமே அங்கீகரிப்புச் செய்தியை விண்ணப்பதாரரின் கணனிக்குப் பெற்றுத் தரும். மறு கணமே விண்ணப்பதாரருக்கு கம்பனியை தாபித்தல் சம்பந்தமான ஆவணங்களை தயாரித்தல், திணைக்களத்துக்குச் செலுத்த வேண்டிய கட்டணங்களைச் செலுத்துதல், திணைக்களத்துக்கு உரிய ஆவணங்களை ஆற்றுப்படுத்தல் போன்ற நடவடிக்கைகளை உலகில் எந்தவொரு இடத்தில் இருந்தும், எந்தவொரு நேரத்திலும் தமது கணனியின் ஊடாக மேற்கொள்வதற்கு இயலக் கூடிய வகையில் அமைப்பு இற்றைப்படுத்தப்பட்டுள்ளது. நிற்க, கம்பனியின் கூட்டிணைப்புச் சான்றிதழை விண்ணப்பதாரருக்கு கணனியின் ஊடாக வழங்குவதுடன், அந்தச் சான்றிதழ் QR குறியீட்டுடன் வழங்கப்படுவதால் எவராகிலும் அக் QR குறியீட்டின் ஊடாக சான்றிதழின் துல்லியத் தன்மையை உறுதிப்படுத்திக் கொள்ளக் கூடிய இயலுமை உள்ளதால் ஆவணங்கள் உயர் மட்டத்திலான செல்லுபடித் தன்மைக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. கம்பனிகளின் ஆவண மாற்றங்களை முன் வைத்து கம்பனிகளின் தகவல்களை இற்றைப்படுத்துவதற்கான சகல சேவைகளையும் நிகழ் நிலையினூடாக (online) மேற்கொள்வதற்கு மக்களுக்கு வசதிகள் அளிக்கப்பட்டுள்ளன.

- **கம்பனி கோப்புக்களை நிகழ் நிலையில் பயன்படுத்துவதற்கான e-தேடல் (e-Search) வசதிகளை வழங்குதல்.**

  பாரம்பரிய முறையில் பொது மக்கள் குறிப்பிட்ட ஒரு கம்பனியின் கோப்புகளை பரிசீலிக்க தேவையாயின், வேலை நாட்களில், கடமை நேரத்தினுள் திணைக்களத்துக்கு வருகை தந்து தமது தேவைகளை பூர்த்தி செய்வதற்கு நேர்ந்தது. எனினும் இந்த வருடம் **e**-தேடல் (e-Search) அறிமுகப்படுத்தப்பட்டதன் மூலம் சேவை பெறுநர்கள் தாம் இருக்கும் இடத்தில் இருந்தே தமக்குத் தேவையான கம்பனியின் கோப்புக்களை தேடும் இயலுமையைப் பெற்றுள்ளனர்.

❖ E Certificate with Verification

உலகில் பல நாடுகள் முன் மாதிரியாகக் கொள்ளும் சிங்கப்பூர் மற்றும் நியுசிலாந்து போன்ற மிகவும் வளர்ச்சி அடைந்த நாடுகளின் கம்பனிப் பதிவு நடைமுறைகளில் கூட கண்டிராத இயங்கு நிலை சரிபார்ப்புடன் கூடிய கூட்டிணைப்புச் சான்றிதழ் இந்த வருடம் இணையத்தின் வாயிலாக வழங்க ஆரம்பிக்கப்பட்டது. உலகெங்கிலும் உள்ள கம்பனி பதிவுதாரர்கள் கூட்டிணைப்புச் சான்றிதழைப் பெற்றுக் கொள்வதற்கு இந்தத் திணைக்களத்துக்கு வருகை தர வேண்டியிருந்த தேவைப்பாட்டை இந்தச் சேவை வெற்றிகரமாக நீக்கியுள்ளதுடன், இதன் மூலம் வியாபார மக்களுக்கும் கம்பனி பற்றிய அக்கறையுள்ளமூன்றாம் தரப்பினருக்கும் மிகவும் வசதியான, பாதுகாப்பான சூழல் உருவாக்கப்பட்டுள்ளது.

❖ நிகழ் நிலையில் சான்றுறுதியளிக்கப்பட்ட பிரதிகளை வழங்குதல்.

முந்தைய முறையின் கீழ் சான்றிதழ் பிரதிகளைப் பெறுவது மிகவும் சிக்கலான மற்றும் நீண்ட நேரம் செல்லும் செயலாக அமைந்ததால், தமது நேரத்தையும், பணத்தையும் செலவிட்டு பல தடவைகள் திணைக்களத்துக்கு வருகை தர நேர்ந்தமை பொது மக்களிடையே அதிருப்தியை ஏற்படுத்தக் காரணமாக அமைந்தது. மேலும் கோவிட் பரவல் மற்றும் போக்குவரத்து சிரமங்கள் போன்ற காரணங்களால் பொது மக்களுக்கு சேவைகளைப் பெறுவதில் நிலவிய சிக்கல்கள் இதனை மேலும் தீவிரப்படுத்தியது. இதற்கான தீர்வாக e-சான்றுறுதியளிக்கப்பட்ட பிரதிகள் (e certified copies) சேவையை அறிமுகப்படுத்த முடிந்தமையை நாம் பெற்ற மாபெரும் வெற்றியாகும். இந்தச் சேவையின் கீழ் பொது மக்கள் தமக்குத் தேவையான சான்றளிக்கப்பட்ட பிரதிகளை அவரவர் இடத்தில் இருந்தே இணையத்தின் வாயிலாக பெற்றுக் கொள்ள முடியும். இச் சேவை திணைக்கள அலுவலகர்களின் தலையீடு இன்றி இருபத்தி நான்கு மணி நேரமும் சேவையை வழங்கும் நிகழ் நிலை நிகழ் நேர சான்றுறுதியளிக்கப்பட்ட பிரதிகளை வழங்கும் சேவை எனும் (Online Real-time Certified Copies Issuing Service) நிலைக்கு மேம்படுத்தப்பட்டுள்ளது.

❖ DOC Verification (இணையத்தின் வாயிலாக ஆவண சரிபார்ப்பு)

பதிவு செய்யப்பட்ட ஆவணங்களின் சான்றுறுதியளிக்கப்பட்ட பிரதிகளுக்கான விண்ணப்பங்கள் அங்கீகரிக்கப்பட்டதும், அந்த ஆவணங்களை சான்றுப்படுத்துவதற்கு QR குறியீடு (QR Code) மற்றும் இணைப்பு (URL) அடங்கலான ஆவணம் விண்ணப்பதாரருக்கு மின்னஞ்சல் (email) ஊடாக அனுப்பி வைக்கப்படுவதுடன், அதில் குறிப்பிட்டுள்ள இணைப்பை (URL) அணுகுவதன் மூலம் பயனர்களுக்குத் தேவையான ஆவணங்களை அணுகுவதற்கான அல்லது அச்சுப் பிரதிகளைப் பெறுவதற்கான வாய்ப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன.

விண்ணப்பித்த அனைத்து சான்றுறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளும் QR குறியீட்டின் (QR Code)ஊடாக வழங்கப்படுவதுடன், ஆவணங்களை விரைந்து பரிசீலிப்பதற்காக QR குறியீட்டை (QR Code) ஸ்கானிங் செய்வதன் மூலமோ அல்லது இணைப்பை

அணுகுவதன் மூலமோ குறித்த ஆவணம் கம்பனி பதிவுத் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள ஆவணத்தின் சான்றுறுதிப்படுத்தப்பட்ட பிரதிதானா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளலாம். மேலும் பதிவிறக்கம் செய்யப்பட்ட ஆவணத்தின் அச்சிடப்பட்ட குறியீட்டு எண்ணுடன் (அணுகல் புள்ளி) (Access Point) https://docverify.drc.gov.lk எனும் இணையப் பக்கத்தினுள் பிரவேசிப்பதன் மூலமும் ஆவணங்களின் துல்லியத் தன்மையை மேலும் உறுதிப்படுத்திக் கொள்ள முடியும். இவ்வாறு வழங்கப்பட்ட சான்றுறுதியளிக்கப்பட்ட ஆவணம் திணைக்களத்தின் அங்கீகாரத்தைப் பெற்ற திகதி முதல் 03 மாத காலத்துக்கு செல்லுபடியானதாகும்.

- **அரச நிறுவனங்களுக்கு நிகழ் நிலை கோப்பு தேடல் (Online File Search) முறைமையை அறிமுகப்படுத்தல்.**

அரச நிறுவனங்களுக்கென எதுவித அறவீடுகளுமின்றி வேண்டிய நேரத்தில் திணைக்களத்தில் பதிவு செய்துள்ள கம்பனிகளுக்குரிய ஆவணங்களை இணையத்தின் வாயிலாக பயன்படுத்தக்கூடிய வாய்ப்பை வழங்கியுள்ளது

- **வாடிக்கையாளர் சேவை பிரிவை ஸ்தாபித்தல்.**

திணைக்களத்தின் தரவு அமைப்பைப் பயன்படுத்துவோர் அந்த அமைப்பைப் பாவிக்கும் போது எழும் சிக்கல்களை முன் வைப்பதற்கும், ஆலோசனைகள் மற்றும் உதவிகளைப் பெற்றுக் கொள்வதற்குமென தனிப்பிரிவொன்றை ஸ்தாபிக்குமாறு பல வேண்டுகோள்களை விடுத்தனர். திணைக்களத்தினுள் நிலவும் பணிக் குழுவின் பற்றாக்குறைக்கு மத்தியிலும் அதற்கென தனிப் பிரிவொன்றைத் ஸ்தாபித்து, அந்தப் பிரச்சனைக்கான தீர்வைக் காண்பதற்காக பணிக் குழுவை அமர்த்த முடிந்தமை எமது திணைக்களம் அடைந்த வெற்றியாகும்.

- **காகிதப் பாவனையைக் குறைப்பதற்கு இயன்றமை.**

கம்பனியை தாபிக்கும் போது, கம்பனியின் பெயரை மாற்றும் போது, கம்பனியை கூட்டிணைக்கும் போது,கடன் பத்திரங்களின் பதிவை மேற் கொள்ளும் போது, பொது ஒப்பந்தங்களை பதிவு செய்யும் போது, கம்பனியின் செயலாளர் மற்றும் கணக்காய்வாளர் ஆகியோரை பதிவு செய்யும் போது மற்றும் சங்கங்களைப் பதிவு செய்யும் போது வழங்கப்பட வேண்டிய சான்றிதழ்களை அச்சிடுவதற்குத் தேவையான காகிதங்கள் கொள்வனவு செய்யப்பட்டு அரசாங்க அச்சகத்தில் அச்சிடப்பட்டது. இது தவிர,சேவைகளைப் பெறும் போது சேவை பெறுனர் முன் வைக்க வேண்டிய விண்ணப்பங்கள் அரசாங்க அச்சகத்தில் அச்சிடப்பட்டு பெறப்பட்டன. இதற்கென பெரும் செலவுகளை ஏற்க நேர்ந்ததுடன், திணைக்களத்தின் பணிகள் இணையத்தின் வாயிலாக மேற் கொள்ள ஆரம்பித்ததும் வழங்கப்பட்ட அனைத்து சான்றளிக்கப்பட்ட பிரதிகளும் அச்சிடுவதை நிறுத்தி, இணையத்தின் வாயிலாக அதன் பிரதிகளை வழங்குவதன் மூலம் இதற்கான செலவுகளைக் குறைப்பதற்கு இயன்றமை எமது மாபெரும் வெற்றியாகும்.

மேலும் சான்றுறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளை வழங்குவது திணைக்களத்தின் முதன்மையான பணியாவதுடன், அதற்கென பெருமளவான காகிதங்கள் பயன்படுத்தப்பட்டன. இவ் ஆண்டு அவை முற்றாக நிறுத்தப்பட்டதுடன், நிழற்பிரதிகள் எடுக்கும் பணிகளையும் நிறுத்தியன் மூலம் அதற்காக ஏற்க நேர்ந்த செலவுகளை மேலும் குறைக்க முடிந்தது.

காகிதத் தட்டுப்பாடும்,கடும் பொருளாதார நெருக்கடியும் நிலவும் சூழலில் இன்றைய கால கட்டத்தில், காகிதப் பாவனையை குறைத்து அதற்கான செலவுகளை குறைப்பதற்கு முடிந்தமை அரசாங்க நிறுவனம் என்ற ரீதியில் நாம் பெற்ற குறிப்பிடத்தக்க வெற்றியாகும்.

2.2 சவால்கள்

- e–RoCசெயற் திட்டம் தொடர்ச்சியாக இற்றைப்படுத்தி பேணிச் செல்லப்பட வேண்டும். அதற்குத் தேவையான உதிரிப் பாகங்களையும், சேவைகளையும் துரிதமாகவும், உயர் தரத்தைக் கொண்டதாகவும் பெற வேண்டிய போதிலும், அவை உயர் சந்தைப் பெறுமதியைக் கொண்டுள்ளன. e–RoC அமைப்பை சிறப்பான முறையில் பராமரித்துச் செல்வதற்குத் தேவையான சேவைகளைப் பெறும் போதான மற்றும் அதன் பராமரிப்பின் போதான செலவுகளை அரசாங்கத்தின் குறித்த ஒழுங்கு முறைகளுக்கும், விதிகளுக்கும் ஒழுகவே ஏற்க நேர்ந்துள்ளது. அவ்வாறு அரசாங்க ஒழுங்கு முறைகளுக்கும், விதிகளுக்கும் இணங்க செயற்படும் போது செலவுகளை கட்டுப்படுத்தவும், செயலாற்றவும் தவிர்க்க முடியாத குறிப்பிட்ட காலத்தை எடுப்பதால் விரைவாக பதிலளிக்க வேண்டிய,விலை உயர்ந்த, உயர் தரத்திலான சேவையின் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வது பெரும் சவாலாக உள்ளது.

- e–RoC அமைப்பின் கீழ் திணைக்களத்தின் பிரதான சேவைகள் முழுவதும் இணையத்தின் வாயிலாக மேற் கொள்வதால் அந்தச் செயற்பாட்டை ஒழுங்குபடுத்தவும், இற்றைப்படுத்தவும் தகவல் தொழிநுட்பப் பிரிவு தாபிக்கப்பட்டுள்ளது. அந்தப் பிரிவுக்கு தகவல்கள் மற்றும் தொலைத் தொடர்பு சேவையின் ஒரு பணிப்பாளர், இரு உதவிப் பணிப்பாளர்கள், 03 தகவல் மற்றும் தொலைத் தொடர்பு தொழிநுட்ப அலுவலகர்கள் மற்றும் 06 தகவல் தொலைத் தொடர்பு தொழிநுட்ப உதவியாளர்கள் அடங்கலான பணிக் குழு ஒன்று அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இருப்பினும் கணனி அமைப்பின் ஊடாக சேவைகள் அனைத்தையும் வழங்கும் இந்தத் திணைக்களத்தில் இரு தகவல் மற்றும் தொலைத் தொடர்பு தொழிநுட்ப உதவியாளர் மட்டுமே பணியாற்றி வருவதுடன், அந்தப் பிரிவில் எஞ்சிய பதவிகள் அனைத்தும் வெற்றிடங்களாக உள்ளன. அதனால் திணைக்களத்துக்கு தொடர்ந்தும் தேவையான தகவல் தொலைத் தொடர்பு சேவைக்கான ஆலோசனைகளை பெற்றுக் கொள்வது தொடர்பில் இந்த அமைப்பை

மேம்படுத்துவதற்கு ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்ட நிறுவனத்தின் மீது முழுமையாக சார்ந்திருக்க நேர்ந்துள்ளதுடன், திணைக்களம் சுதந்திரமாக செயற்படுவதற்கு அது சவாலாக மாறியுள்ளது.

- e–RoC அமைப்பு தொழிநுட்ப ரீதியாக மிக உயர் மட்டத்தில் உள்ள, சிக்கலான செயல்முறையான அமைப்பாக உள்ளதால் நிபுணத்துவ அறிவைக் கொண்ட அலுவலகர்களின் சேவை அமைப்பை கையாள்வதற்கு அவசியமாகும். இதற்கு தகவல் தொழிநுட்ப தரவு தொகுதி நிர்வாக (Data Base Administrator) மற்றும் மென்பொருள் மேம்பாடு தொடர்பான அறிவைக் கொண்ட அலுவலகர்களின் (Software Developers) சேவையைப் பெற்றுக் கொள்வது இன்றியமையாத போதிலும் அரச சேவையில் அத்தகைய பதவிகள் இல்லை. அரசாங்கத்தில் பதவி வகிக்கும் தற்போதைய அலுவலகர்கள் இந்த அமைப்பை முன்னெடுத்துச் செல்லும் அளவுக்கு இற்றைப்படுத்தப்பட்டவரா என்பது கேள்விக்குரிய விடயமாகும்.

- e–RoC அமைப்பின் விருத்தியுடன், அதற்கு இணையாக மேம்படுத்தப்பட்ட களஞ்சிய அறை (server room) இல்லாமையும், அதனை முறையாக பராமரித்துப் பேணிச் செல்வதற்கு போதுமான தொழிநுட்ப அறிவைக் கொண்ட அலுவலகர் இல்லாமையும் மற்றுமொரு பிரச்சனையாகும்.

- தொழிநுட்பத்துக்கு ஏற்றாற் போல் மாற்றமடைய விரும்பாத சிலரது எதிர்மறையான கருத்துக்களுடனும், செயல்களுடன் இதனை வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்வது நம் முன் உள்ள சவாலாகும்.

- e–RoC அமைப்புடன் மற்ற அரச நிறுவனங்களை ஒன்றிணைப்பது அரசாங்க கொள்கையான போதிலும், அந்த நிறுவனங்கள் இன்னும் இந்த அமைப்புடன் இணையும் அளவுக்கு அபிவிருத்தி அடையாமையும்,ஒரு சில நிறுவனங்களின் நாட்டமின்மையாலும் ஒன்றிணைவதில் சிரமங்கள் உள்ளன.

- இதைத் தவிர, அங்கீகரிக்கப்பட்ட 163 அலுவலகர்களைக் கொண்ட திணைக்களத்தின் பணிக் குழுவில் 49 பதவிகள் வெற்றிடங்களாக உள்ளன. அதாவது சுமார் மூன்றில் ஒரு பகுதிக்கும் அண்மித்த அளவிலான பதவிகள் பணிக் குழுவில் வெற்றிடங்களாக உள்ளமையால் திணைக்களத்தின் பணிகளை முகாமைத்துவம் செய்வது சிரமமாக உள்ளது. நிற்க, 2022.12.31 ஆம் திகதிக்கு மேலும் 03 அலுவலகர்கள் சம்பளமற்ற 5 வருட உள்நாட்டு / வெளிநாட்டு விடுமுறையைப் பெற்றுள்ளனர்.

2.3 எதிர்கால நோக்குகள்

❖ **Electronic Signature** அறிமுகப்படுத்தல்.

தற்போதைய முறைக்கு அமைய சேவை பெறுனர்கள் குறித்த தகவல் அமைப்புக்கு உள்ளிட்டு, அதன் வன் பிரதியைப் பெற்று, அதனை கையொப்பமிட்டு, ஸ்கான் செய்து மீண்டும் அமைப்புக்கு பதிவேற்றம் செய்ய வேண்டும். இது பல படிமுறைகளைக் கொண்ட செயல்முறையாவதால் சேவை பெறுனரின் நேரமும், பணமும் விரயமாகிறது. அதனால் நாம் எதிர்வரும் வருடங்களினுள் **(Electronic Signature)** இலத்திரனியல் கையொப்ப முறையை அறிமுகப்படுத்துவதற்கு எதிர்பார்ப்பதுடன், அதனூடாக சேவை பெறுனர்களுக்கு ஆவணங்களை பதிவிறக்கம் செய்யாமல் உரிய மென் பொருளைப் பாவித்து கணனியின் ஊடாகவே கையொப்பம் இட்டு திணைக்களத்தின் அமைப்புக்கு அனுப்ப முடியும். இதனூடாக சேவை பெறுனர் எமது சேவையை மேலும் எளிமையாகவும், வசதியாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

❖ **Simplification of Incorporation Process**

கம்பனியை கூட்டிணைக்க தற்போது சுமார் 03 அல்லது அதற்கு மேற்பட்ட மாதிரிப் படிவங்கள் பயன்படுத்தப்படுகின்றன. அந்த 03 மாதிரிப் படிவங்களின் மூலம் முன்வைக்கப்படும் தகவல்கள் அனைத்தும் ஒரே படிவத்தின் மூலம் முன் வைப்பதற்கு எதிர்பார்க்கப்படுவதுடன், அதனூடாக கம்பனி கூட்டிணைப்பு மென்மேலும் எளிமைப்படுத்தி அதன் மூலம் வியாபார எளிதாக்கல் சுட்டியை உயர் மட்டத்துக்கு கொண்டு வருதல் எமது இலக்காகும்.

❖ **Name Approval Simplification**

பெயரை அங்கீகரிப்பதற்கான கோரிக்கைகள் பெறப்பட்டதும் அதனை இந்தத் திணைக்களத்தின் அலுவலகர் இரண்டு நிலைகளில் பரிசோதித்து பின்னர் அங்கீகாரத்தை வழங்குவதுடன், இந்த நடவடிக்கையை அமைப்பினூடாக பரிசீலித்து அங்கீகாரம் வழங்கும் முறையை பின்பற்றுதலும் எமது இலக்காக உள்ளது.

❖ **துறைமுக நகர அபிவிருத்தி ஆணைக்குழுவுக்கு வரும் முதலீட்டாளர்களின் துணையுடன் வெளிநாட்டுக் கம்பனிகளைப் பதவி செய்தல்.**

துறைமுக நகர அபிவிருத்தி ஆணைக்குழுவுடன் நேரடியாக செயலாற்றி அவர்களிடம் வரும் முதலீட்டாளர்களை பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கவும் எதிர்பார்க்கப்படுகிறது. அதற்குத் தேவையானவாறு எமது அமைப்பை மேம்படுத்தி முதலீட்டாளர்களுக்கு துறைமுக நகர அபிவிருத்தி ஆணைக்குழுவின் ஊடாக நேரடியாக எமது அமைப்பினுள் வெளிநாட்டுக் கம்பனியாக பதிவு செய்வதற்கான வாய்ப்புக்களை வழங்குவதும் அதன் நோக்காகும்.

❖ **தேசிய ஆளடையாள அட்டையை சரிபார்க்கும் செயல்முறையை அறிமுகப்படுத்தல்.**

e–RoC அமைப்புக்கு தகவல்களை உள்ளிடும் கம்பனிகளின் பணிப்பாளர்கள், செயலாளர்கள் மற்றும் பங்குதாரர்கள் ஆகியோரை அந்த அமைப்புக்குள் உள்ளீர்ப்பு செய்து தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் சரியானதா என்பதையும், பெற்றுத் தரும் தகவல்கள் மெய்யானதா என்பதையும் உடனடியாக பரிசீலிப்பதற்கு ஆட்பதிவுத் திணைக்களத்துடன் இணைந்து பணியாற்றுவதும் எமது இலக்காக அமைகிறது.

❖ **திணைக்களத்தில் அங்கீகரிக்கப்பட்ட பணியாளர்களை அதிகரித்தலும், அங்கு நிலவும் வெற்றிடங்களை பூர்த்தி செய்தலும்**

இறுதியாக 2016 ஆம் ஆண்டிலேயே இந்தத் திணைக்களத்தின் முழு பணிக் குழுவின் அதிகரிப்புக்கு அங்கீகாரம் கிடைத்தது. 2016 (86,309) நிலவரத்தின் படி, செயற்பாடான கம்பனியின் அளவிலும் பார்க்க சுமார் இரு மடங்கு செயற்பாட்டுக் கம்பனிகளை 2022.12.31 (166,563) ஆம் திகதியில் தன்னகத்தே கொண்டிருப்பதுடன், அதன் நேர் விளைவாக திணைக்களத்தின் பணிச் சுமைகள் அதிகரித்துள்ளன. இருப்பினும் அதற்கு ஒத்ததாக பணியாளர்கள் அதிகரிக்கப்படவில்லை. குறிப்பாக பதவி நிலை அலுவலகர் போதியளவாக இருந்ததில்லை என்பது கவனிக்கத்தக்கது. ஆகையால் எதிர்வரும் ஆண்டினுள் பணியாளர்களை அதிகரிப்பதை இலக்காகக் கொண்டுள்ளதுடன், நிலவும் வெற்றிடங்களையும் பூர்த்தி செய்து சிறந்த பணியாளர்களைக் கொண்டதாக எதிர்காலப் பணிகளை எதிர் கொள்வது எமது இலக்காகும்.

❖ **இறுதி முதலீட்டாளர்களுக்கு கவர்ச்சிகரமான சேவையை வழங்கி உயர் வர்த்தக சமூகத்தை உருவாக்கி அதன் மூலம் நாட்டின் பொருளாதாரத்தை வலுவூட்டல்** எனும் இலக்கை அடைய எமது நிறுவனம் முகம் கொடுக்கும் சவால்களை வெற்றி கொண்டு அடுத்த ஆண்டை எதிர் கொள்வதே எமது திட்டமாகும்.

சஞ்ஜீவ திசாநாயக்க,
கம்பனிகள் பதிவாளர் நாயகம்.

SANJEEWA DISSANAYAKE
Registrar General of Companies
Department of the Registrar of Companies
"Samagam Medura",
400, D. R. Wijewardana Mawatha,
Colombo-10.

2007 ஆம் ஆண்டு 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட
கம்பனிகள் நிதியம் 2022.12.31 ஆம் திகதிய ஐந்தொகை

	குறிப்பு	2022.12.31	2021.12.31
		(Rs.)	(Rs.)
சொத்துக்கள்			
நடைமுறை சொத்துக்கள்			
காசு மற்றும் காசுக்கு நிகரானவை	10	25,290,038	51,585,296
கிடைக்கவேண்டிய வருமானம்	11	7,110,404	5,540,329
காகிதாதிகள்	12	2,913,882	3,177,551
முற்பணக் கொடுப்பனவுகள்	13	986,298	598,023
பாதுகாப்புச் சேவை உத்தரவாத வைப்பு		25,000	25,000
மூலதனம் - திறைசேரி பட்டியல்	14	59,999,941	
பெறவேண்டிய திறைசேரி உண்டியல் வட்டி	15	49,624,987	13,053,600
பெறவேண்டிய திறைசேரி பட்டியல் வட்டி	16	5,887,895	
திறைசெயலாளிடமிருந்து பெறப்படவேண்டிய நிதி	17	975,729	654,116
		152,814,172	74,633,914
நிலையான சொத்துக்கள்			
பங்கு மூலதனம்		90,275,000	90,275,000
சொத்துப் பகுதிகள் மற்றும் உபகரணங்கள்	18	1,097,729,499	326,850,542
நடைமுறை வேலை கணக்குகள்	19	64,488,381	233,467,318
திறைசேரி செயலாளரின் முற்பணம்	20	4,771,729,297	4,899,899,962
மூலதனம் - திறைசேரி பங்குகள்	21	1,927,103,803	1,283,266,000
மூலதனம் - திறைசேரி பங்குகள்(திரவ)	22	68,665,551	43,666,289
		8,019,991,531	6,877,425,112
மொத்த சொத்துக்கள்		8,172,805,703	6,952,059,026
பொறுப்புக்கள்			
நடைமுறை பொறுப்புக்கள்			
தி.செ. செலுத்த வேண்டிய நிதி	23	1,951,467	1,311,373
தே.வ.திணைக்களத்திற்கு செலுத்தவேண்டிய வெட்	24	889,556	320,136
செலுத்தவேண்டிய வட்டி - கலைத்தல்	25	24,747,782	17,900,857
அட்டுறு செலவுகள்	26	8,372,826	16,618,295
பொது வைப்புக் கணக்கு	27	69,745	3,538,834
கலைப்பாரது வைப்பு	28	50,351,526	29,989,953
		86,382,902	69,679,448
நிலையான பொறுப்புக்கள்			
மொத்த பொறுப்புக்கள்		86,382,902	69,679,448
நிகர சொத்து		**8,086,422,801**	**6,882,379,578**
நிகர சொத்து/பொறுப்பு			
திரண்ட மேலதிகம்/பற்றாக்குறை	29	8,086,422,801	6,882,379,578
மொத்த நிகர சொத்து/பொறுப்பு		**8,086,422,801**	**6,882,379,578**

கம்பனிகள் நிதியம் - 2022.12.31 இல்
முடிவடைந்த வருடத்திற்கான
ஐந்தொகை

	குறிப்பு	2022	2021	2020
பெறுவனவுகள்				
கம்பனிகள் பதிவாளர் நாயகத்தின் பெறுவனவுகள்	1	**512,656,180,06**	**478,671,525.39**	**448,266,309.25**
ஏனைய பெறுவனவுகள்		**207,057,026.38**	**70,974,635.20**	**183,300,141.26**
திறைசேரி பத்திர வட்டி	2	186,520,882.54	58,931,580.68	163,734,043.86
திறைசேரி பட்டியல் வட்டி	3	8,287,904.77	344,278.52	8,327,397.40
கட்டிட வாடகை	4	12,120,000.00	11,160,000.00	11,160,000.00
சிற்றுண்டிச்சாலை வாடகை				2,000.00
ஏனைய பெறுவனவு	5	128,239.08	538,776.00	76,700.00
மொத்த பெறுவனவுகள்		**719,713,206.44**	**549,646,160.59**	**631,566,450.51**
செலவுகள்				
சம்பளம், ஏனைய மற்றும் சேவை இலாபங்கள்	6	(8,709,395.78)	(6,736,719.92)	(6,790,224.05)
வழங்கள் மற்றும் நுகர்வு பொருட்கள்	7	(119,431,217.30)	(114,190,576.29)	(89,123,510.57)
தேய்மானம்	8	(10,089,685.16)	(10,220,278.38)	(10,987,355.95)
ஏனைய செலவுகள்	9	(1,486.98)		(600.00)
மொத்த செலவுகள்		**(138,231,785.22)**	**(131,147,574.59)**	**(106,901,690.57)**
மேலதிகம்		**581,481,421.22**	**418,498,586.00**	**524,664,759.94**

2007 ஆம் ஆண்டு 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட
கம்பனிகள் நிதியம் 2021.12.31 ஆம் திகதியில்
முடிவடைந்த ஆண்டுக்கான வரவு செலவுக் கணக்கறிக்கை

	Rs	Rs
காசேட்டின் ஆரம்ப மீதி		
100153298050 இலக்க கணக்கு மீதி		47,360,774.86
100113298052 இலக்க கணக்கு மீதி		4,224,520.81
Add : Cash Receipts during the Year		
கூட்டு – ஆண்டிற்கான பெறுவனவு	30,873,847.00	
கம்பனி பதிவாளரின் பெறுகைகள் (காசு, காசோலை)-143100153298050	267,324,901.51	
கம்பனி பதிவாளரின் பெறுகைகள் (இணையம் - சம்பத் வங்கி)	58,590,044.54	
கம்பனி பதிவாளரின் பெறுகைகள் (இணையம் - நேஷன்ஸ் டிரஸ்ட் வங்கி)	503,592,607.67	
கம்பனி பதிவாளரின் பெறுகைகள் (இலங்கை வங்கி)	19,440,00	
கம்பனி பதிவாளரின் பெறுகைகள் (நேரடி)	2,400.00	
தி.பி.செ.கொடுப்பனவு - முற்பணம் ஈடு செய்தல்	127,849,052.44	
காசுக்கட்டளை வருமானம்	74,580.00	
கட்டிட வாடகை	13,050,000.00	
கலைக்கும் பிரிவிற்கான பெறுகைகள்	20,580,073.09	
தி.சே.பட்டியலிலான வட்டி (கம்பனிகள் கலைக்கும் கணக்கு)	6,846,924.50	
தி.சே.பட்டியல் முதிர்வு தொகை (கம்பனிகள் கலைக்கும் கணக்கு)	-	
தி.சே.பட்டியலிலான வட்டி	173,803,377.50	
தி.சே.பட்டியல் முதிர்வு தொகை	42,400,000.00	
ஏனைய வைப்புக்கள்	66,175.00	
ஏனைய வருமானம்	222,710.00	1,245,296,133.25
		1,296,881,428.92
கழி – நடப்பு ஆண்டுக்கான காசுக்கொடுப்பனவுகள்		
மேலதிக நேர மற்றும் விடுமுறைக் கொடுப்பனவு	3,900,071.68	
பிரயாண செலவுகள் – உள்நாடு	194,792.00	
காகிதாதிகள் மற்றும் அலுவலக செலவுகள்	4,164,992.62	
எரிபொருள்	4,158,942.94	
சீருடைகள்	92,000.00	
மருத்துவ வழங்கல்		
ஏனையவை (1205)	868,285.92	
வாகன பராமரிப்பு	919,329.86	
பொறித் தொகுதிகள், சாதனங்கள் (பராமரிப்பு)	5,972,875.10	
கட்டிடங்கள் (பராமரிப்பு)	465,396.67	
போக்குவரத்து செலவுகள்	3,186,395.00	
தபால் மற்றும் தொடர்பாடல்கள்	13,312,009.50	
மின்சாரம் மற்றும் நீர்	11,204,668.31	
வரிபணம்	2,116,800.00	
ஏனையவை (1409)	84,434,338.45	
இயந்திரங்களும் இயந்திரசாதனங்களும் – முற்பணம்	1,201,685.00	
வாகன புணரமைப்பு	347,450.00	

தளபாடங்களும் அலுவலக சாதனங்களும்	97,139.00	
இயந்திரங்களும் இயந்திரசாதனங்களும்		
அலுவலர் பயிற்சி	342,778.33	
மீளமைப்பு	10,428,841.84	
தி.பி.செ கொடுப்பனவு - 20.03.02.10	9,505,025.67	
தி.பி.செ கொடுப்பனவு - 20.03.02.10.SB	79,518,036.45	
தி.பி.செ கொடுப்பனவு - 20.03.02.10.NTB	17,471,447.31	
தி.பி.செ கொடுப்பனவு - 20.03.02.10.BOC	149,487,505.28	
முத்திரை	-	
வங்கிக் கட்டணங்கள்	1,486.98	
சேகரிப்புத் தொகைக்கான கொடுப்பனவு– உ. இறைவரி. தணை.	80,793,400.19	
சேகரிப்புத் தொகைக்கான கொடுப்பனவு– உ. இறைவரி. தணை.	12,277,493.16	
திறைசேரி உண்டியல் முதலீடு	746,320,008.71	
திறைசேரி உண்டியல் முதலீடு (கம்பனி கலைப்பாரது கணக்கு)	24,999,261.13	
கம்பனி கலைப்பாரது கணக்கின் மூலம் கொடுப்பனவு	218,500.00	
வருமானத்தில் மீளச்செலுத்துகை	55,170.00	
வைப்புகளில் மீளச்செலுத்துகை	3,535,264.18	1,271,591,391.28
காசேட்டின் இறுதி மீதி		
கணக்கு இலக்கம் 100153298050 இன் மீதி	18,856,280.37	
கணக்கு இலக்கம் 100153298052 இன் மீதி	6,433,757.27	25,290,037.64
		1,296,881,428.92

2022 டிசம்பர் 31 இல் உள்ளவாறான
நிதி நிலைமைக் கூற்று

	குறிப்பு	உண்மை நிலை 2022 ரூபா	2021 ரூபா
நிதி சொத்துக்கள் அற்றது			
ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரண	ஏசீஏ-6		-
நிதி சொத்துக்கள்			
முற்பணக் கணக்குகள்	ஏசீஏ-5/5ஏ	21,584,525.00	22,760,428.00
காசு மற்றும் காசுக்குச் சமனானவை	ஏசீஏ-3		
மொத்த சொத்துக்கள்		21,584,525.00	22,760,428.00
தேறிய சொத்துக்கள் / உரிமைப் பங்கு			
திறைசேரிக்கு தேறிய சொத்துக்கள்		21,584,525.00	22,760,428.00
ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரண ஒதுக்கம்			-
வாடகை மற்றும் பணி முற்பண ஒதுக்கம்	ஏசீஏ-5பீ		
நடைமுறைப் பொறுப்புக்கள்			
வைப்புக் கணக்குகள்	ஏசீஏ-4		-
தீர்க்கப்படாத பணிமுற்பண மீதி	ஏசீஏ-3		
மொத்தப் பொறுப்புக்கள்		21,584,525.00	22,760,428.00

பக்க இலக்கம் 8 முதல் 54 வரை ஏசீஏ 1 முதல் ஏசீஏ 7 வரையான மாதிரிப் படிவங்களின் மூலம் சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குத் தகவல்கள் மற்றும் குறிப்புகளின் பக்க இலக்கம் 55 முதல் 62 வரை உள்ளடங்கியுள்ள ஏனைய கணக்குக் குறிப்புகளின் விபரமும் இந்த இறுதிக் கணக்குகளில் உள்ளடங்கிய பகுதியாகும். இந்த நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு இணங்கியதாக மேற்கொள்ளப்பட்டுள்ள அதேவேளையில் இங்கு நிதிக்கூற்றுக்களின் குறிப்புகளின் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளவாறு, மிகவும் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. அதனால் மேலேயுள்ள இறுதிக் கணக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைகள், அது தொடர்பான கணக்குக் குறிப்புகள் மற்றும் ஏனைய கணக்குத் தகவல்கள் திறைசேரிப் புத்தகங்களுடன் சீராக்கம் செய்யப்பட்டுள்ளது என்பதையும் அவை அந்தத் தொகைகளுடன் உடன்படுகின்றது என்பதையும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

நிதி நிருவாகத்திற்காக வினைத்திறன்மிக்க உள்ளக நிருவாகத் தொகுதியொன்று அறிக்கையிடும் நிறுவனத்தில் காணப்படுகின்றது எனவும் நிதி நிருவாகத்திற்காக உள்ளக நிருவாகத் தொகுதியின் செயற்திறனை மேற்பார்வை செய்வதற்கும் அதற்கு அமைவாக அந்தத் தொகுதியை வினைத்திறனுடன் நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையானவாறு மாற்றங்களை மேற்கொள்வதற்கும் அடிக்கடி மீளாய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றது எனவும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்	கணக்கீட்டு உத்தியோகத்தர்	பிரதான நிதி உத்தியோகத்தர்/ பிரதான கணக்காளர் / பணிப்பாளர்(நிதி)/ஆணையாளர்(நிதி)
பெயர் : ஜே.எம்.திலகா ஜயசுந்தர	பெயர்: சஞ்ஜீவ திச்சாநாயக்க	பெயர் : பி.ஏ.ஆர்.என். பாலசூரிய
பதவி : செயலாளர்	பதவி : கம்பனிகள் பதிவாளர் நாயகம்	
திகதி : 2023.02.27	திகதி : 2023.02. 24	திகதி : 2023.02.23

J.M. Thilaka
Minist
73/1, Galle Ro

SANJEEWA DISSANAYAKE
Registrar General Of Companies
Department Of The Registrar Of Companies
" Samagam Medura "
400, D.R. Wijewardana Mawatha,
Colombo - 10.

B. A. R. N. BALASOORIYA
Chief Accountant
Department of The Registrar of Companies
"Samagam Medura"
No. 400, D. R. Wijewardena Mawatha,
Colombo - 10.

J.M. Thilaka
Secre
Ministry of
73/1, Galle Road, C 03.

கம்பனிகள் நிதியம் - நிதி பிரவாக அறிக்கை (மறைமுக முறைகள்)

2022.12.31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி பிரவாக அறிக்கை

	ரூபா.	ரூபா.
செயல்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான பணப்புழக்கம்		
		581,481,421
வருமான செலவுக் கணக்கின் மேலதிகம்		
சரிசெய்க		
தேய்மானம்	10,089,685	
வட்டி வருமானம்	(194,808,787)	
முந்தைய ஆண்டிற்கான சரிசெய்தல்		
நிலையான சொத்து விற்பனை வருமானம்	(138,011)	
நிலையான சொத்து விற்பனை நட்டம்	22,672	
		(184,834,441)
பணி மூலதன மாற்றம்		396,646,980
முற்கொடுப்பனவு	(388,275)	
தி.பி.செயலாளர் மூலம் ஈடுசெய்ய வேண்டிய தொகை	(321,613)	
கிடைக்க வேண்டிய வருமானம்	(1,570,075)	
தே.வ.ஆ. செலுத்த வேண்டிய வெட்	569,420	
அட்டுரு செலவுகள்	(8,245,469)	
பொது வைப்புகள்	(3,469,089)	
காகிதாதிகள்	263,669	
தி.பி.செயலாளரின் முற்பணம்	640,094	(12,521,337)
நடைமுறையிலுள்ள காசு பெறுவனவுகளின் தேறிய நிதி		384,125,643
முதலீட்டு நடைமுறையிலுள்ள காசு பெறுவனவுகள்		
